# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : SA-717/A/2024**

திருமதி.த.தனம் -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர், சேலம் மாவட்டம் – 636 401. -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திருமதி.த.தனம் அவர்கள் சார்பாக அவரது மகன் QR code meeting link மூலமாக நேரில் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு எஸ். செல்லத்துரை, பொதுத் தகவல் அலுவலர் / வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், மேட்டூர், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 23.10.2023 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், சேலம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஒமு.36176/2019/கே2 நாள்: .02.2020 என்ற எண்ணிட்டு மேட்டூர் சார் ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்கபட்டட குறிப்பாணை கடிதத்தின் மீது மேட்டூர் சார் ஆட்சியர் அவர்களால் தற்போது வரைக்கும் எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கைகள் விவரம், விசாரணை அறிக்கை, ஆவணங்கள் மற்றும் கோப்புகளின் நகல் கோரி 13 இனங்களில் தகவல்கள் வழங்கக் கோரி விண்ணப்பித்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால் மனுதாரர் 04.12.2023 நாளிட்ட பிரிவு 19(1)–ன்கீழ் முதல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். மேல் முறையீட்டு அலுவலர் பதில் வழங்காத காரணத்தினால், மனுதாரர், 19.01.2024 நாளிட்ட பிரிவு 19(3)–ன் கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரால் கோரப்பட்ட தகவல்கள் அனைத்தும் வழங்கப்பட்டது எனவும் மனுதாரருக்கு எழுத படிக்க தெரியாது என மனுதாரரின் மகன் தனக்கு பொது தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் திருப்திகரமாக உள்ளது என 30.09.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார.

5. இன்றைய விசாரணையில் மனுதாரரின் சார்பாக தொலைபேசி மூலமாக ஆஜரான அவரது மகன் ஆணையத்தின் உத்தரவின் பெயரில் தனக்கு முழுமையான தகவல் கிடைக்கப்பெற்றது எனவும் வீட்டு மனை பட்டா உத்தரவு மேட்டூர் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் 09.03.2026 நாளிட்ட செயல்முறை ஆணைகள் மூலம் அளித்துள்ளதாகவும் தான் ஆணையத்திற்கு மிகுந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்தார். அதன் அடிப்படையில் மனுதாரருக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டதை இவ்வாணயம் உறுதி செய்து, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவை முற்றாகம் செய்து உத்தரவுடுகிறது.

ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

//ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

**<u>வழக்கு எண்</u>** <u>SA-717-A-2024</u>

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக
உதவியாளர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
மேட்டூர், சேலம் மாவட்டம் – 636 401.

**<u>மனுதாரர்:</u>**
திருமதி. த.தனம்
96/2, கலர்பட்டி,
எடையப்பட்டி கிராமம்,
ராமிரெட்டிப்பட்டி அஞ்சல்,
ஓமலூர் வட்டம்,
சேலம் – 636501

Copy to File
Je/PA 06.10.2026